(தொலைமடல் மூலம் அனுப்பப்பட வேண்டிய முகவரி : பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்லை என்ற விலாசத்திற்காகும்) அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாவிடின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டியதுடன் கீழ்க்குறிப்பிடப்பட்ட தகவல்களையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(i) பரீட்சையின் பெயர் ;

(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;

(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;

(iv) விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட்ட திகதி, பதிவுத்தபால் இலக்கம், தபாலகத்தின் பெயர்.

அண்மித்தவர்கள் அறிவித்தல் மூலம் பரீட்சை ஆணையாளர் நாயகம் (இ) கிளைக்கு அறிவிக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.

11. மேற்கூறப்பட்ட 09 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேவைகளை பூர்த்திசெய்ய முடியாத பட்சத்தில் அபேட்சகர்களினால் பின்னர் அறிவிக்கப்படும் எந்த முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

12. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதி செய்வதற்கான சான்றுகளை சமர்ப்பிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும். அதற்கென ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை மற்றும் செல்லுபடியாகக்கூடிய வெளிநாட்டு கடவுச்சீட்டு ஆகியவை மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் அபேட்சகர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அடிப்படையில் பரீட்சைக் கட்டணங்களை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

(அ) முதல் தடவை (முழுமையான பரீட்சைக்கு அல்லது பகுதிக்கான கட்டணம் அறவிடப்பட மாட்டாது.)

(ஆ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்குமாக-

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக் கட்டணம் | ரூ. 225.00 |
| ஒரு பாடத்திற்கு | ரூ. 75.00 |

பரீட்சார்த்திகளினால் ஒப்பமிட்டு உரியவாறு இரத்துச் செய்யப்படும் வருமான முத்திரை மூலம் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2007.06.20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆவது வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது தடைதாண்டல் பரீட்சை**

First Efficiency Bar Examination for Office of the Sri Lanka Educational Administrative Service

(பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளருக்கு திணைக்கள பொறுப்பாளர் ஊடாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.)

1. (அ) முதலெழுத்துக்களை இறுதியில் எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

(உ-ம் : SILVA, S. A.)

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2. பிறந்த திகதி :- [ ][ ][ ][ ] [ ][ ] [ ][ ]

3. (i) பதவிப் பெயர் :----.

(ii) திணைக்களம்/ வலயக் கல்விக் காரியாலயம்/ கோட்டம்/ பாடசாலை :----.

4. முகவரி :-

(i) அலுவலக முகவரி :----.

(ii) சொந்த முகவரி :----.

(iii) பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

5. அறிவித்தலின் 2 ஆவது வாசகத்தின் (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கங்களுடன் எடுக்கும் பாடங்களைக் கீழே தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :-

பாட இலக்கம் :----. பாடம் :----.
பாட இலக்கம் :----. பாடம் :----.
பாட இலக்கம் :----. பாடம் :----.

6. உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :----.

7. இப்பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது ஒரு பகுதிக்கு தோற்றியிருப்பின் தோற்றிய வருடம், பாடம் மற்றும் மொழியைக் குறிப்பிடுக.

| ஆண்டு | பாடம் | மொழி |
|---|---|---|
| ---- | ---- | ---- |
| ---- | ---- | ---- |
| ---- | ---- | ---- |

8. மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், மேலே 6 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள மொழிமூலம்

